[1st November 1962

*1031 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether there is any proposal for the separation of the Judiciary from the Executive in temple administration ; and

(b) if so, the details thereof ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No, Sir.

(b) Does not arise.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : சார், கோயில் நிலங்கள்பற்றி ஏதாவது தகராறு ஏற்பட்டால் அதற்காக கோயிலுக்குச் சம்பந்தப்பட்ட டெபுடி கமிஷனரிடத்தில் தாவா தொடர வேண்டியிருக்கிறது. டெபுடி கமிஷனரே இந்த நிர்வாகத்துக்கு அதிகாரியாகவும் விசாரணை செய்யும் உத்தியோகஸ்தராகவும் இருப்பதால் நியாயம் கிடைக்காது என்று கருதுவதால் இந்த விஷயத்தில் அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்து நிர்வாகத்தையும், நீதியையும் தனித்தனியாக இயங்கும்படி செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்த உத்தேசம் அரசாங்கத்துக்கு இல்லை. இதுபற்றியெல்லாம் பரிசீலனை செய்யப்பட்ட பிறகுதான் சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. டெபுடி கமிஷனர் தீர்ப்பில் திருப்தி இல்லையென்றால் சிவில் கோர்ட்டுக்குப் போய் நீதி பெற்றுக் கொள்ளலாம்.

நஞ்சை-புஞ்சை நிலங்கள்

*1032 கேள்வி.—திரு. கோ. சி. மணி : கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் 1959-60-ம் ஆண்டில் இருந்த நஞ்சை புஞ்சை விளை நிலங்கள் எத்தனை ஏக்கர் மாவட்ட வாரியாக ?

(இ) அவைகளை அனுபவித்து வந்த பட்டாதாரர்களின் எண்ணிக்கை என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (அ) & (இ) A statement[a] is placed on tht Table of the House.

திரு. கோ. சி. மணி : ஜாபிதாவில் கண்டுள்ள பட்டாதார் எண்ணிக்கையில் 30 ஸ்டாண்டர்டு ஏக்கர்களுக்கு மேல் உள்ள பட்டதார் எண்ணிக்கை எவ்வளவு ?

கனம் திரு. வெ. ராமையா : அதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும்.

*Housing Schemes*

*1033 Q.—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) number of schemes undertaken by the City Improvement Trust and the Housing Board during the last three years ;

---

a Printed as Appendix II on page 438.